## 97. ஆத்தும ஆதாயம் செய்திடவே

பல்லவி

ஆத்தும ஆதாயம் செய்திடவே
ஆண்டவரே உமக்கு
சிலுவையிலே தாகமாயிருக்கிறேன்
என்று உரைத்தவரே

சரணங்கள்

1. தினம் தினம் எத்தனை கூட்டங்கள்
நரகத்தை நோக்கி ஓடுகின்றது
அவர்கள் உமக்கு நேராக
திரும்ப வேண்டும் தேவனே
\- ஆத்துமா

2. கண்கள் இருந்தும் குருடராக
குழியில் விழுகின்றார்கள்
குருட்டு கண்களை திறக்க வைத்து
உம்மை அவர்கள் காணனுமே
\- ஆத்துமா

3. சகல ஜனத்திற்கு சுவிசேஷம்
கடந்துசென்று சொல்லனுமே
உமது அன்பை ஏற்றுகொண்டு
ஜனங்கள் மனது திரும்பனுமே
\- ஆத்துமா